Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW9 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மாரிமுத்து, வனவர் |
| Father's Name | – | குப்புசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 17th September 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 3 to 6 absent. 317 Petition filed and allowed. Accused 1, 2 absent. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோவை வனச்சரகம் துடியலூர் பிரிவில் வனவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.08.2013 ம் தேதி அர்த்தநாரிபாளையம் சுற்று வனக்காப்பாளராக பணியில் இருந்தபோது, பொள்ளாச்சி நகர காவல்துறையினரால் ஒப்படைக்கப்பட்ட செம்மர குற்ற வழக்கு தொடர்பாக என்னை பிரிவு வனவர் அழைத்தார்.

நான் அலுவலகம் வந்தபோது, டாரஸ் வண்டியில் செம்மர கட்டைகளும் மற்றும் ஒரு இனோவா காரும் இருந்தது. அலுவலகத்தில் 6 எதிரிகள் இருந்தனர். மேற்படி எதிரிகள் பட்டியல் மரங்களை வெட்டி குற்றம் புரிந்ததாக விசாரணை செய்தோம். விசாரணையில் நான் எதிரிகள் நௌசாத் மற்றும் வினோ ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

மற்ற எதிரிகளுக்கு வனச்சரக அலுவலர் மற்றும் வனவர்கள் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். சாட்சி கையொப்பம் நான் இட்டுள்ளேன். மேற்படி வினோ அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி நௌசாத்திடம் சங்கரநாராயணன் வனவர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்னர் அங்கிருந்த செம்மரக்கட்டைகளை எண்ணி எடைபோட்டு எனது பொறுப்பில் இருந்த H நமூனாவில் பதிவு செய்யப்பட்டது. தங்கவேல் மற்றும் சங்கரநாராயணன் வனவர்கள் எடை மற்றும் சுற்றளவுகளை அளந்து சொல்ல என்னால் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கோவை ரோட்டில் இருக்கும் AST குடோனில் மீதமுள்ள செம்மரக்கட்டைகள் இருப்பதை ஒப்புக்கொண்டதால், தனிக்குழுவினருடன் பொள்ளாச்சி கிராம நிர்வாக அலுவலர் பூமிநாதன் அவர்களை அழைத்து சென்று, அங்கு சோதனை செய்வதற்காக சென்றோம்.

அந்த குடோனில் சட்டர் பூட்டப்படாமல் சாத்தப்பட்டிருந்தது. எதிரி ரவி அடையாளம் காட்ட, அந்த குடோனை திறந்து பார்த்தோம். மேற்படி குடோனில் யாரும் இல்லாததால் மேற்படி குடோனில் கதவில் வாரண்ட் ஒட்டப்பட்டது. அங்கு செம்மரக்கட்டைகள் அடிக்கி வைத்திருந்ததை உறுதி செய்து, கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் எடை மற்றும் அளவுகள் போடப்பட்டது.

இந்த அளவுகளை சங்கரநாராயணன் மற்றும் தங்கவேல் வனவர்கள் செய்தார்கள். என்னால் பதிவு செய்யப்பட்டது. இந்த சொத்துக்களும் என் பொறுப்பில் இருந்த H நமூனாவில் பதிவு செய்யப்பட்டது. குடோன் செல்லும்போது சுமார் 4 மணியிருக்கும். அங்கிருந்த சொத்துக்களை கைப்பற்றி, வனச்சரக அலுவலகம் கொண்டு வரப்பட்டது.

பின்னர் விசாரணை அலுவலரான வனச்சரக அலுவலருக்கு உதவியாக வழக்கில் உடனிருந்தேன். தற்போது என்முன் காட்டப்படும் அ.சா.ஆ.9 மற்றும் 10 H நமூனாக்கள் தயார் செய்யப்பட்டவை. மேற்படி எதிரிகளை 6 நபர்களையும் எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். எதிரிகள் மனு பேரில் ஆஜரில்லை.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

21.08.2013 ம் தேதி காலை 09.00 மணிக்கு எனக்கு பிரிவு வனவர் தகவல் கொடுத்தார். நான் பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்திற்கு 10 மணிக்கு வந்தேன். வனச்சரக அலுவலகத்தில் லாரியும், இனோவா காரும் இருந்தது. காரின் பதிவெண் எண் 10 வருடம் ஆனதால் ஞாபகமில்லை.

அப்போது 6 எதிரிகளும் அங்குதான் இருந்தார்கள். நான் எதிரி பினு அவர்களிடம் வந்தவுடன் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன். எதிரி பினுவிடம் குறிப்பிட்டு வாக்குமூலம் வாங்கியதற்கு காரணம் ஏதும் இல்லை. வாக்குமூலம் வாங்கும்போது வனச்சரக அலுவலர்களும் வனவர்களும் இருந்தார்கள்.

லாரியில் எத்தனை கட்டைகள் இருந்தது என்றால் சுமார் 174 கட்டைகள் இருக்கலாம். அலுவலகத்தில் உள்ள எடை மிசினில் அளவீடு போடப்பட்டது என்றால் சரிதான். AST குடோனுக்கு வரும்போது 4 மணியிருக்கும். 4 மணிக்குதான் வனத்துறை அலுவலர்கள் AST குடோனுக்கு வந்தோம் என்றாலும், அதற்கு முன்னர் வனத்துறை அலுவலகர்கள் யாரும் செல்லவில்லையென்றால் சரிதான்.

இடம் யாருக்கு சொந்தமானது என விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். யாருக்கு சொந்தமானது என்று எனக்கு நினைவில்லை. மேற்படி குடோனில் சுமார் 354 மரக்கட்டைகள் இருக்கலாம். மேற்படி கட்டைகளை அந்த இடத்திலேயே எடை போட்டோம் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு போகும்போதே எடை மிசினோடுதான் சென்றோம் என்றால் சரிதான்.

மேற்படி குடோனில் 3 மணிநேரம் அதாவது 7 மணிவரை அங்கு இருந்தோம் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லையென்றால் சரியல்ல. லாரியில் இருந்த செம்மரக்கட்டைகளையும் குடோனில் இருந்த செம்மரக்கட்டைகளும் என் முன்னால் எடை போடப்பட்டது தவறு என்றாலும் சரியல்ல. H நமூனாவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல.

**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5 ம் எதிரி கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவருக்கு தமிழில் எழுத

படிக்க தெரியாது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது மொழி பெயர்ப்பாளரை வைத்து பதிவு செய்யவில்லையென்றால் சரிதான்.

எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் தரும்போது தமிழ், மலையாளம் ஆகிய இரண்டு மொழிகளில் பேசினார். எதிரிக்கு மலையாளம் மட்டும்தான் தெரியும் என்றால் சரியல்ல. நானாக பொய்யாக ஒரு வாக்குமூலத்தை எழுதி, எதிரியிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.